# அலகு : மூலகங்களினதும் சேர்வைகளினதும் அளவறிதல் - 2

## சார் மூலக்கூற்றுத்திணிவு

- ஒன்றுக்கொன்று வேறுபட்ட அணுக்கள் சேர்க்கையடைவதனால் தோன்றும் மூலக்கூறுகள் சேர்வைகள் ஆகும்.
- சேர்வை மூலக்கூறுகள் பல்லின அணு மூலக்கூறுகள் ஆகும்.
  உதாரணம் : $CO_2$ , $H_2O$
- மூலக மூலக்கூறுகள் ஓரின அணு மூலக்கூறுகள் ஆகும்.
  உதாரணம் : $O_2$ , $N_2$ , $H_2$ , $Cl_2$
- மூலகம் அல்லது சேர்வை மூலக்கூறொன்றின் திணிவு அணுத்திணிவு அலகைப் போன்று எத்தனை மடங்கு என்பது குறித்த மூலகத்தின் அல்லது சேர்வையின் சார் மூலக்கூற்றுத்திணிவு எனப்படும்.

- $$\text{சார் மூலக்கூற்றுத்திணிவு} = \frac{\text{மூலகம் அல்லது சேர்வை மூலக்கூறின் திணிவு}}{\text{அணுத்திணிவு அலகு}}$$

- $$\text{சார் மூலக்கூற்றுத்திணிவு} = \frac{\text{மூலகம் அல்லது சேர்வை மூலக்கூறின் திணிவு}}{1.67 \times 10^{-24}\ g}$$

| மூலகம் அல்லது சேர்வை | மூலக்கூறொன்றின் திணிவு | அணுத்திணிவு அலகு | சார் மூலக்கூற்றுத்திணிவு |
|---|---|---|---|
| நீர் $H_2O$ | $2.99 \times 10^{-23}$ g | $1.67 \times 10^{-24}$ g | |
| காபனீரொட்சைட்டு $CO_2$ | $7.31 \times 10^{-23}$ g | $1.67 \times 10^{-24}$ g | |
| குளோரின் $Cl_2$ | $11.806 \times 10^{-23}$ g | $1.67 \times 10^{-24}$ g | |

- மூலகம் அல்லது சேர்வை மூலக்கூறொன்றின் திணிவு $^{12}_{6}C$ சமதானி அணுவொன்றின் திணிவின் $\frac{1}{12}$ பங்கைப் போன்று எத்தனை மடங்கு என்பது குறித்த மூலகத்தின் அல்லது சேர்வையின் சார் மூலக்கூற்றுத்திணிவு எனப்படும்.

- சார் மூலக்கூற்றுத்திணிவு $= \dfrac{\text{மூலகம் அல்லது சேர்வை மூலக்கூறின் திணிவு}}{^{12}_{6}C \text{ சமதானி அணுவொன்றின் திணிவு } \times \frac{1}{12}}$

- சார் மூலக்கூற்றுத்திணிவு $= \dfrac{\text{மூலகம் அல்லது சேர்வை மூலக்கூறின் திணிவு}}{1.993 \times 10^{-23} g \times \frac{1}{12}}$

| மூலகம் அல்லது சேர்வை | மூலக்கூறொன்றின் திணிவு | $^{12}_{6}C$ சமதானி அணுவொன்றின் திணிவு x $\frac{1}{12}$ | சார் மூலக்கூற்றுத்திணிவு |
|---|---|---|---|
| நீர் $H_2O$ | $2.99 \times 10^{-23}$ g | $1.993 \times 10^{-23} g \times \frac{1}{12}$ | |
| காபனீரொட்சைட்டு $CO_2$ | $7.31 \times 10^{-23}$ g | $1.993 \times 10^{-23} g \times \frac{1}{12}$ | |
| குளோரின் $Cl_2$ | $11.806 \times 10^{-23}$ g | $1.993 \times 10^{-23} g \times \frac{1}{12}$ | |

**வினாக்கள் :**

1. சார் மூலக்கூற்றுத்திணிவிற்கு அலகு உண்டா?
2. சார் மூலக்கூற்றுத்திணிவு தொடர்பான அறிவைப் பயன்படுத்தி மூலக்கூறொன்றின் திணிவைக் கணிப்பதற்கான சமன்பாடொன்றை உருவாக்குக.

- மூலகங்களின் சாரணுத்திணிவுகளைப் பயன்படுத்தி சேர்வைகளின் சார் மூலக்கூற்றுத்திணிவைக் கணிக்கலாம்.
- குறித்த மூலக்கூறொன்றிலுள்ள அணுக்களின் சாரணுத்திணிவுகளின் கூட்டுத்தொகை அதன் சார் மூலக்கூற்றுத்திணிவாகும்.

| மூலக்கூறு | சார்மூலக்கூற்றுத் திணிவு |
|---|---|
| $CO_2$ | = ( 12 x 1 ) + ( 16 x 2 )<br>= 12 + 32<br>= 44 |
| $H_2O$ | = ( 1 x 2 ) + ( 16 x 1 )<br>= 2 + 16<br>= 18 |
| $O_2$ | = 16 x 2<br>= 32 |
| $N_2$ | = 14 x 2<br>= 28 |
| $C_6H_{12}O_6$ | = ( 12 x 6 ) + ( 1 x 12 ) + ( 16 x 6 )<br>= 72 + 12 + 96<br>= 180 |
| $CO(NH_2)_2$ | = ( 12 x 1 ) + ( 16 x 1 ) + ( 14 x 2 ) + ( 1 x 4 )<br>= 12 + 16 + 28 + 4<br>= 60 |

- அயன் சேர்வைகள் மூலக்கூறுகளாகக் காணப்படுவதில்லை.
- அயன் சேர்வைகள் அயன் சாலக வடிவில் காணப்படும்.
- அயன் சேர்வைகளில் அயன்கள் காணப்படும் எளிய விகிதத்தைக் குறிப்பிடுவதன் மூலம் அவற்றின் சூத்திரம் எழுதப்படும்.
- அயன் சேர்வைகளின் சூத்திரத்துக்குரிய திணிவு சார் மூலக்கூற்றுத் திணிவாகக் கொள்ளப்படும்.

| அயன் சேர்வை | சூத்திரத் திணிவு |
|---|---|
| NaCl | = 23 + 35.5<br>= 58.5 |
| MgO | = 24 + 16<br>= 40 |
| $Li_2O$ | = ( 7 x 2 ) + ( 16 x 1 )<br>= 14 + 16<br>= 30 |

- அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| சேர்வை | சூத்திரம் | அணுக்களின் எண்ணிக்கை | சார் மூலக்கூற்றுத் திணிவு |
|---|---|---|---|
| 1. மெதேன் | $CH_4$ | | |
| 2. ஐதரசன் குளோரைட்டு | HCl | | |
| 3. காபனாற்குளோரைட்டு | $CCl_4$ | | |
| 4. அமோனியா | $NH_3$ | | |
| 5. சுக்குரோசு | $C_{12}H_{22}O_{11}$ | | |
| 6. கந்தகவீரொட்சைட்டு | $SO_2$ | | |
| 7. எதைல் அற்ககோல் | $CH_3CH_2OH$ | | |
| 8. சல்பூரிக்கமிலம் | $H_2SO_4$ | | |
| 9. யூரியா | $CO(NH_2)_2$ | | |
| 10. குளுக்கோசு | $C_6H_{12}O_6$ | | |